## SECTION A

**Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) நீலகிரியில் பேசப்படும் திராவிட மொழிகள் எவை ? விளக்கு. [redacted] *10*

(b) தமிழ் அற இலக்கியங்கள் – விளக்குக. *10*

(c) சமூகக் கிளைமொழி என்றால் என்ன ? சான்றுகள் தருக. [redacted] *10*

(d) தமிழில் இனவரைவியல் நாவல்கள் யாவை ? மதிப்பிடுக. *0*

(e) தமிழ் இலக்கிய மரபுகளின் அரசியல் பின்னணிகளை மதிப்பிடுக. *10*

**Q2. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) தமிழ் மொழி ஒலியன்கள் மலையாள மொழி ஒலியன்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன ? ஏன் ? *20*

(b) சிலப்பதிகாரத்தில் நான்கு வருணக் கருத்தியல் உள்ளதா ? ஆராய்க. *15*

(c) நாயகன் – நாயகி பாவம் என்றால் என்ன ? தமிழ் பக்தி இலக்கிய மரபு கொண்டு விளக்கு. *15*

**Q3. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) சங்க இலக்கிய மொழி தற்கால இலக்கிய மொழியிலிருந்து வேறுபடுகிறதா ? விளக்கு. *20*

(b) மணிமேகலைக் காப்பியத்தின் வழி அறியலாகும் தமிழகச் சமயச் சூழல்கள் எவை ? மதிப்பிடு. *15*

(c) தூதுக்குரிய பொருள்கள் எவை ? ஏன் ? விளக்குக. *15*

Q4. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) தமிழ் வேற்றுமை உருபுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு. 20

(b) அற இலக்கியங்களின் அடிப்படைக் கருத்தியலை (Ideology) விவரி. 15

(c) தற்காலத் தமிழ் இலக்கியங்களில் பொதுவுடமைக் கருத்தியலின் தாக்கத்தை விவரிக்க. 15

IAS தமிழ்த்துடம்
@tamiloptional_ias

பின்தொடர @tamiloptional_ias
@vaagaiias

@tamiloptional_ias

## SECTION B

**Q5. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) சமூகவியல்த்திறனாய்வின் கூறுகள் எவை ? விளக்கு. *10*

(b) மெய்ப்பாடு, ரசம் என்ற இரண்டும் ஒன்றா ? விவாதி. *10*

(c) இதழாளர் பெரியார் – நிறுவுக. *10*

(d) நாயக்கர் காலத்தில் தமிழுக்கு இருந்த ஆதரவு எவ்வாறானது ? விளக்கு. *10*

(e) தமிழக மகளிர் போர் மரபுகளில் எவ்வாறு உறவுபடுத்தப்படுகின்றனர் ? *10*

**Q6. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) உளவியல் திறனாய்வின் அடிப்படைகள் எவை ? விளக்கு. *20*

(b) தமிழ்க் கதைப்பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் குறித்து விளக்குக. *15*

(c) இறப்புச் சடங்குகளில் புலப்டும் சமூக உறவுகள் எவ்வாறானவை ? ஆராய்க. *15*

**Q7. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) இலக்கிய நாட்டுப்புறவியல் என்றால் என்ன ? விளக்குக. *20*

(b) தமிழ்ச் சமூக ஊடகங்களின் போக்குகளை மதிப்பிடு. *15*

(c) தமிழ்ப் பழமொழிகளைச் சமூகவியல் நோக்கில் பாகுபாடு செய்து விளக்குக. *15*

**Q8. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) உவமையை அடிப்படையாகக் சொண்ட இலக்கியக் கோட்பாடுகள் எவை ? எவ்வாறு ? விளக்குக. *20*

(b) சிறுதெய்வங்கள் – பெருந்தெய்வங்கள் வழிபாட்டு முறைகளை வேறுபடுத்திக் காட்டுக. *15*

(c) தமிழில் நிகழ்ந்த மொழிபெயர்ப்பு முயற்சிகளைப் பட்டியலிட்டு விளக்குக. *15*



IAS தமிழ்க்கடல்